# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590


## ஆணை நாள் - 05.10.2026

## முன்னிலை

## திரு வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்., மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்.CP-5097-G-2024**

திரு. N. ஸ்ரீதரன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம் வட்டம்,
வேலூர் மாவட்டம்- 632602. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 20.01.2023 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 22.02.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 08.03.2023 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 19.06.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 26.10.2024 |

****

## ஆணை

இவ்வழக்கு இன்று (05.10.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு. N. ஸ்ரீதரன் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி த.தனலட்சுமி தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், குடியாத்தம் வட்டம், உள்ளி கிராமத்தில் பாகபிரிவினை செய்து உட்பிரிவு செய்யப்பட்டு குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலக நில அளவை பிரிவு கோப்பு எண்.8A18/1379 பசலி நாள் 11.09.1969ன்படி எந்த எந்த புலங்கள் உட்பிரிவு செய்யப்பட்டு யார் யார் பெயரில் எவ்வளவு நிலங்கள் தனிப்பட்டா செய்யப்பட்டது என்ற விபரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 9 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல்

மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (05.10.2026) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.மூ.மு.டி1/415/2023 நாள் 22.02.2023 மற்றும் ந.க.எண்.மூ.மு.இ1/2677/2024 நாள் 24.01.2025 ஆகிய தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேற்படி, தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவலுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- *மனுதாரரின் 20.01.2023 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள கோப்பு எண்.8A1k/8A18/1379 பசலி நாள் 11.09.1969ன்படி 8A பதிவேடு பதிவு குறித்து இனம் 1,2,3 க்கான தகவல்களை முழுமையாக மனுதாரருக்கு வழங்கும் பொருட்டு, இது குறித்த ஆவணங்கள் தங்களது அலுவலகத்தில் இல்லாதபட்சத்தில், வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியரக அலுவலக பதிவறையில் தேடிப்பார்த்தும், சென்னை, எழும்பூர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை அலுவலகத்தில் இருப்பின் அங்கிருந்து பெற்றும், வேலூர் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநரக அலுவலகத்திலும் மற்றும் வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்துணை ஆய்வாளர் அலுவலகத்திலும் மேற்கண்ட கோப்புகள் தொடர்பான அறிக்கைகளை மேற்கண்ட அலுவலகங்களிலிருந்து பெற்று ஒரு அறிக்கையாக தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வட்டத்துணை ஆய்வாளர் ஆகிய அலுவலருக்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்படுகிறது.*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து' தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய விரைவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு விசாரணை அறிக்கையின் நகல்களை அனுப்பிவைத்து, அவற்றை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் இக்கோப்பு தொடர்பான அனைத்து ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்படுகிறது. மேலும், 12.11.2026*

*அன்றைய தினம் தவறாமல் இவ்வாணையத்திற்கு வரவேண்டுமென்று மனுதாரருக்கு இவ்வாணையத்தின் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது.*

**ஒம்**/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP-5097-G-2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம் வட்டம்,
வேலூர் மாவட்டம்- 632602.

வட்டத்துணை ஆய்வாளர்
வட்டாட்சியர் அலுவலகம்,
குடியாத்தம் வட்டம்,
வேலூர் மாவட்டம்- 632602.

**<u>மனுதாரர் CP-5097-G-2024</u>**
திரு. N. ஸ்ரீதரன்
17,ராஜா நகர் ஆசிரியர் காலனி,
குடியாத்தம்,
வேலூர் - 632602
Phone : 9443968504

Copy to: File
VPS /PA/07.10.2026